## இலங்கை பில்லியார்ட்ஸ் மற்றும் ஸ்நூகர் சங்கம் - 2015

இலங்கை பில்லியார்ட்ஸ் மற்றும் ஸ்நூகர் சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவகமொன்றால் எனக்கு உதவி செய்யப்பட்டது. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை பில்லியார்ட்ஸ் மற்றும் ஸ்நூகர் சங்கத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சகல நிலையான சொத்துக்களையும் பெறுமானத்தேய்வு செய்வதற்காக ஒரே பெறுமானத்தேய்வு வீதத்தினை பிரயோகிப்பதன் பொருத்தப்பாடு வினாவுக்ககுரியதாக உள்ளது.

(ஆ) உரிமை மூலதனத்தில்/ தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2009 ஆம் ஆண்டில் மீள விலைமதிக்கப்பட்டிருந்த போதிலும், மீள விலைமதித்தல் அறிக்கைகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால், மீள விலைமதித்தல் செயன்முறையின் சரியான தன்மை மற்றும் மீள விலைமதித்தலின் பின்னரான கணக்கீட்டு முறைகள் என்பவற்றை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) சங்கத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணிவரப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் உரிமைத்துவம், உள்ளதன்மை மற்றும் பெறுமதியினை மெய்மையாய்வு செய்வதற்கான ஆதாரப்படுத்தும் ஆவணங்களாக பல ஆண்டுகளிற்குரிய பௌதீக மெய்மையாய்வு அறிக்கைள் கிடைக்கப்பெறவுமில்லை. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காட்டப்பட்டுள்ள ரூபா 1,076,027 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களினது முன்கொண்டு சென்ற பெறுமதி குறித்து கணக்காய்வில் நம்பிக்கைகொள்ள முடியாதிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை பில்லியார்ட்ஸ் மற்றும் ஸ்நூகர் சங்கத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 495,868 மிகையொன்றானதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 121,730 ஆனமையால் நிதி

விளைவுகளில் ரூபா 617,598 ஆன முன்னெற்றமொன்று காட்டப்படுகின்றது. செலவினம் ரூபா 482,505 ஆல் அதிகரித்திருந்தமையுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 1,100,103 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்துக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சங்கத்தின் முகாமைத்துவத்தினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பேணுகை

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு